# ஜாமக்காரன்

# JAMAKKARAN

VOLUME - 1 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 3

MARCH 2017 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com

கர்த்தருக்குள் அன்பானவர்களே.



உயிரோடிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

இரண்டு மாதங்களாக அறிவித்தப்படி கேன்சர் வியாதியில் பாதிக்கப்பட்டவர்களுக்காக 2017 மார்ச் 14ம் தேதி விசேஷ ஒரு **பகல் உபவாச ஜெபம்** ஏறெடுக்கப்பட்டு ஆசீர்வாதத்தோடு முடிந்திருக்கும்.

இந்த பத்திரிகை அந்த குறிப்பிட்ட ஜெயம் முடிந்தபிறகு உங்கள் கையில் தாமதமாக கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன்.

நாங்கள் அன்று செய்த ஜெபம் கேட்கப்பட்டிருக்குமா? நிச்சயமாக கேட்கப்பட்டிருக்கும். ஜெபத்தின் பலன்களும் சம்மந்தப்பட்ட குடும்பங்களுக்கு நிச்சயமாக கிடைத்திருக்கும் என்று நிச்சயமாக நம்பலாம். நாங்கள் செய்த அன்றைய ஜெபத்துக்கு **எல்லாரையும் அழைக்கவில்லை.** ஆனால் எல்லாருக்கும் **அறிவித்திருக்கிறோம்.**

(சேலம்) **ஏற்காடு** மலை ரோட்டில் அமைந்திருக்கும் Youth for Christ ஸ்தாபனத்தின் **ஹாலில்** வைத்து அந்த ஜெபம் ஏறெடுக்கப்படும் என்பதை **விளம்பர** நோட்டீஸில் அறிவித்து அந்த ஜெபத்துக்கு ஜெபிக்க வரவேண்டியவர்களின் தகுதியை பற்றி குறிப்பிட்டோம்.

# மார்ச் 2017

## யாருடைய ஜெபம் கேட்கப்படும்

மனந்திரும்புதலின் (இரட்சிப்பின்) அனுபவத்தை பெற்றவர்கள் மட்டும் அந்த ஜெபத்தில் கலந்துகொண்டு ஜெபித்தால் அந்த ஜெபம் மட்டும்தான் கேட்கப்படும். **கிறிஸ்தவர்கள்** என்ற பெயரில் எந்த சபையை சார்ந்தவர்கள் இந்த ஜெபத்தில் கலந்துக்கொண்டு ஜெபித்தாலும் அவர்கள் **மனந்திருப்புதலின்** அனுபவம் இல்லாதுபோனால் **அவர்களின் ஜெபங்கள்** எதுவும் கேட்கப்படாது. **மனந்திரும்புதலின்** அனுபவத்தை பெற்று கிறிஸ்துவின் சாட்சிகளாக ஜீவிப்பவர்கள் (அவர்கள் எந்த சபையை சார்ந்தவர்களாக இருந்தாலும்) அவர்களின் ஜெபத்தை மட்டுமே கர்த்தர் கேட்பார்.

என் பாவம் மன்னிக்கப்படாமல் மற்றவர்களின் பாவத்தை மன்னியும் என்று ஜெபித்தால் அந்த ஜெபத்தை கர்த்தர் எப்படி கேட்பார்?. அதில் என்ன நியாயம் இருக்கிறது. என் வசனத்துக்கு நடுங்குகிறவர்களையே நான் நோக்கி பார்ப்பேன் என்று வேத வசனம் கூறுகிறது.

யோ. 15:7ல் நீங்கள் என்னிலும், **என் வார்த்தை** உங்களிலும் நிலைத்திருந்தால் **நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ** அது உங்களுக்கு செய்யப்படும்.

சங். 107:20ல் அவர் **தமது வசனத்தை** அனுப்பி அவர்களை **குணமாக்குகிறார்.**

இப்படி வேத வசனம் மூலம் நம் கர்த்தர் நமக்கு ஆலோசனை கொடுக்கிறார்.

கொலை,விபச்சாரம்,வேசித்தனம் மட்டும் **பாவமல்ல.** மற்றவர்களை நாம் **மன்னிக்காததும்** மற்றவர்களிடம் நாம் **ஒப்புரவாகாமல்** மனதில் கசப்பையும், வைராக்கியத்தையும் வைத்துக்கொண்டு **நானும் விசுவாசி** அல்லது **வரம் பெற்ற ஊழியக்காரன்** என்று கூறினாலும் அவர்களின் ஜெபம் நிச்சயம் கேட்கப்படாது.

யாக்கோபு 5:16ல் **நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு** உங்கள் குற்றங்களை **ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு** ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் என்று யாக்கோபு சபைகளுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

அந்த ஜெபம்தான் கேட்கப்படும் என்று எழுதுகிறார். அந்த வசனத்தில் குறிக்கப்பட்ட அந்த **சபை மக்கள்** யாவரும் இரட்சிக்கப்பட்டு விக்கிரக வணக்கத்தைவிட்டு **மனந்திரும்பி** ஞானஸ்நானம்பெற்று, திருவிருந்தில் பங்குகொள்ளும் பக்தர்கள்தான், ஆனால் யாரோடோ அவர்கள் **மனக்கசப்பு** கொண்டு சில **வருடங்களாக** அல்லது சில **மாதங்களாக** பேசாமல் மனதில் **கசப்பும் வைராக்கியமும்** கொண்டவர்களாக இருந்தால் அவர்கள் **வியாதி சுகம் ஆகாது** என்று ஆலோசனை கூறுகிறார்.

ஒருவர் **பாரத்தை** ஒருவர் **சுமந்து ஒருவருக்காக ஒருவர்** ஜெபியுங்கள் என்று கர்த்தர் கூறியது உண்மைதான். ஆனால் மேலே கூறியபடி மனந் திரும்பாமல் **பெயர் கிறிஸ்தவர்களாக சாட்சியில்லாமல்** வாழ்கிறவர்களின் ஜெபத்தை கர்த்தர் கேட்கமாட்டார் என்று வேதம் திட்டவட்டமாக போதிக்கிறது.

மேலே குறிப்பிட்ட தகுதியை இதை எழுதுகிற டாக்டர் புஷ்பராஜ் ஆகிய எனக்கு இல்லாமல் இருக்குமானால் இதுபோல **எத்தனை உபவாச ஜெப கூட்டங்களை** நான் ஏற்பாடு செய்து ஆயிரக்கணக்கானோர்களின் ஜெபக்குறிப்பு கடிதங்களை வைத்து, எத்தனை மணி நேரம் நான் **அழுது ஜெபித்தாலும்** அந்த ஜெபங்கள் **அத்தனையும் வீண்** என்று வேதம் நமக்கு போதிக்கிறது.

இந்த அடிப்படையில்தான் நான் கடந்த 51 வருடங்களாக, இந்தியாவில் ஒவ்வொரு **மாவட்ட தலைநகரங்களிலும்** இப்படிப்பட்ட ஒரு **பகல் உபவாச** ஜெபக் கூட்டங்களை ஏற்பாடு செய்து அதற்கு ஜெபிக்க அழைப்பு கொடுக்கும்போது **மனந்திரும்புதலின்** அனுபவம் இல்லாதவர்கள் இந்த கூட்டத்துக்கு வரவேண்டாம். நாங்கள் பெரிய திரளான கூட்டங்களை இந்த உபவாச ஜெபத்துக்கு எப்போதும் எதிர்பார்ப்பதில்லை. மனம் திரும்பின உண்மையாய் ஜெபிக்கும், **ஆத்தும பாரம்** உள்ளவர்கள் கொஞ்ச எண்ணிக்கையில் உள்ள விசுவாசிகள் இக்கூட்டத்திற்கு வந்து ஜெபித்தால்போதும் என்று திட்டவட்டமாக விளம்பரப்படுத்துகிறேன்.

இந்தியா முழுவதும் மாவட்டம்தோறும் நான் ஏற்பாடுசெய்த இப்படிப்பட்ட உபவாச ஜெபத்தில் கர்த்தர் **பெரிய அற்புதங்களை** செய்து மக்களை **சுகமாக்கி** சந்தோஷப்படுத்தினார்.

இந்தியாவின் **டெல்லி**முதல் (கிழக்கு மாநிலங்கள் தவிர) கன்னியாகுமரி வரை ஒவ்வொரு மாநிலத்திலும் அதன் தலைநகரில் மண்டபம் வாடகைக்கு எடுத்து சில இடங்களில் CSI மார்தோமா,CNI,மெத்தடிஸ்ட்,பெந்தேகொஸ்தேசபை,லூத்தரன் ஆகிய சபை **விசுவாசி களோடும்** ஆயர்கள், பிஷப்மார்கள், பாஸ்டர்கள் இவர்களின் ஒப்புதலோடு இவர்களில் **இரட்சிக்கப்பட்டவர்களோடு இணைந்து** உபவாச ஜெபக்கூட்டங்களை நடத்தியிருக்கிறேன்.

இப்படிப்பட்ட உபவாச ஜெபக்கூட்டங்களில் **சமர்பித்து ஜெபித்த ஜெப ஜெபகுறிப்புகள்** மூலமாக பலரின் **வியாதிகள் சுகமாயின.** குடும்பத்தில் **பிரிந்தவர்கள் ஒப்புறவானார்கள்.** ஆயிரக்கணக்னோர் **மனந்திரும்பினர். குடிப்பழகத்திலிருந்து** விடுதலை ஆனார்கள். அதோடு ஜெப கூட்டம் நடத்த அந்த மாவட்டங்களில் கர்த்தர் **பெரிய எழுப்பதலை** கட்டளையிட்டார். சபைகளில் **எழுப்புதல்** உண்டானது. ஆயர்களில் பிஷப்மார்கள் பெரிய வரம்பெற்ற ஊழியர்கள் கூட இதன்மூலம் மனந்திருப்பியுள்ளார்கள். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

2017 மார்ச் 14ம் தேதி **ஒரு பகல் உபவாச ஜெபம்** நடத்த நான் அறிவிப்பு கொடுத்தபோது நான் தொடர்புக்கொள்ளாமலே விடுக்காமலே (YFC) ஸ்தாபனத்தின் செயலர் **சகோ. ஜெயசிங்** அவர்கள் தானாகவே முன்வந்து இந்த உபவாச ஜெப கூட்டத்தை எங்களிடத்தில் உள்ள YFC **ஹாலில்** வைத்து நடத்துங்கள். நான் அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்கிறேன் என்று அவராகவே முன் வந்தார். அதைக்குறித்து தொலைபேசியில் பேசி என்னிடம் அறிவித்தார். கர்த்தர் தாமே **சகோதரனையும்** அவரின் YFC குழுவினரையும் ஆசீர்வதிப்பாராக.

இனி வரும் காலங்களில் இப்படிப்பட்ட உபவாச ஜெபக்கூட்ட ஏற்பாடுகளை ஒவ்வொரு மாநில **தலைநகரிலும் விடுமுறை நாளாக** பார்த்து ஏற்பாடு செய்து விசுவாசிகள் என்னை அழைத்தால் நான் வருவேன். அவ்விவரத்தை குறைந்தது நான்கு மாதங்களுக்கு முன்பாக எனக்கு

அறிவிப்பது நல்லது. **நான் எந்த தேதியில்** வேறு ஊழியம் இல்லாது இருக்கிறேனோ அந்த மாதத்தில் **அந்த தேதியில்** கூட்டம் நடத்தலாம். அந்த ஜெப கூட்டத்தின் ஒழுங்குமுறைகள் உண்டு. **காணிக்கை சேகரிக்க கூடாது.** என்னை அழைப்பவர்கள் இப்படிப்பட்ட உபவாச ஜெப கூட்டத்திற்கு வரும் **எனக்கு காணிக்கை ஏதும் கொடுக்க முயற்சிக்காமல்** மக்கள் சுகம்பெற வேண்டும். மக்கள் **மனந்திரும்ப** வேண்டும். தேசத்தில், சபையில், வீட்டில், ஸ்தாபனத்தில் **சமாதானம் உண்டாகவேண்டும்.** நாட்டில் **மழை பொழியவேண்டும்.** வாலிபர்கள் **தீர்க்கதரிசிகளாக மாறாமல்** சாட்சியுள்ளவர்களாக மாறவேண்டும். வாலிப பிள்ளைகள் அவர்களின் சொந்த வீட்டில் **பெற்றோர்களுக்கு** சந்தோஷம் கொடுக்கிறவர்களாகவும் **தெய்வ பயம்** உள்ளவர்களாகவும் மாற வேண்டும்.

**பிரசங்கம்** மனுஷனை மாற்றாது, ஆனால் **வசனம்** மனுஷனை மாற்றும். அதற்கு **மாற்றுகிற கர்த்தரின் கால்களை** ஜெபத்தின் மூலம் பிடிப்போம். **பெலத்தினாலும்.** பராகிரமத்தினாலும் அல்ல **என் ஆவியானவராலே** ஆகும் என்ற(சக. 4:6) ஆவியானவரின் வார்த்தையின்படி **மாற்றுகிற தெய்வத்தை** ஜெபத்தின் வழியாக வேண்டுதல் செய்வோம்.

**ஊழல்** செய்யும் சபை தலைவர்கள் கர்த்தரால் தொடப்படுவார்கள். ஆயர்கள். **பொய் தீர்க்கதரிசனம்** கூறும் மேடை பிரசங்கிமார் TV பிரசஙகத்தின் பொய் பேசும் ஊழியர்கள் மாறுவார்கள். **மனந்திரும்புதலின் அனுபவம்பெற்றவர்கள்** இணைந்து ஜெபித்தால் இப்படிப்பட்ட மாற்றங்கள் நிச்சம் உண்டாகும். (மத் 18:19)

**திறப்பில் வாசலில்** நிற்க கர்த்தர் **மனுஷனையே** தேடுகிறார். எசே. 22:30 திறப்பின் வாசல் என்ற **பெயர் வைக்கப்பட்ட** இடத்தில் ஜெபிப்பவர்களை அல்ல. வாசகர்களாகிய உங்கள் அனைவருக்காகவும் ஜெபிக்கும் உங்கள் சகோதரன். கர்த்தரின் பணியில்:

**டாக்டர் புஷ்பராஜ்**

## முக்கிய அறிவிப்பு:

டாக்டர். புஷ்பராஜ் (ஜாமக்காரன்) என்ற பெயரில் எனக்கு வாட்ஸ் அப்,பேஸ்புக் எதுவும் இல்லை. என் பெயரிலோ, ஜாமக்காரன் பெயரிலோ யாரைக்குறித்தாவது எழுதப்பட்டிருந்தால் அல்லது புகைப்படங்கள் வெளியிட்டிருந்தால் அதற்கும் எனக்கும் வாட்ஸ்அப்,பேஸ்புக்கில் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன். அப்படி எதையாவது என் பெயரில் அல்லது ஜாமக்காரன் பெயரில் கண்டால் உடனே எனக்கு அறிவிக்கவேண்டுறேன். - டாக்டர்.புஷ்பராஜ்

# வேத வசனங்களில் முரண்பாடுகள் இல்லை

குறிப்பு : கடந்த வருடம் ஜாமக்காரனில் Dr. M.S. **வசந்தகுமார்** அவர்கள் எழுதிய புஸ்தகத்திலிருந்து **அந்திக்கிறிஸ்துவின் அடையாளங்கள்** என்ற ஒரு சிறு பகுதியை மட்டும் எடுத்து வெளியிட்டேன். அதை வாசித்த பலர் அவரின் மற்ற வெளியீடுகள் எங்கு கிடைக்கும் என்று எழுதி கேட்டார்கள். அதன் விவரங்களை இந்தியாவில் உள்ள கீழ்காணும் விலாசத்தில் தொடர்புகொண்டு கேட்டு வாங்கி பயனடையுங்கள்.

**The Bible Researsh Centre,**
2/161, Ayyanar Street, Gundur Burma Colony,
Airport (Via) Trichy- 62007, Tamilnadu
Phone : 9942193486 email: vrkbibleteach@yahoo.com

## *The Correct Verdict for the Contradiciting Verses*

Dr. M.S. VASANTHAKUMAR,
B.Teh., M.A., M.Phil., D.Mind

**பிப்ரவரி ஜாமக்காரனின் தொடர்ச்சி...**

***முரண்பாடுகள் இல்லை No. 11***

**ஆதியாகமம் 7:17 - ஜலப்பிரளயம் நாற்பது நாள் பூமியின்மேல் உண்டானது**
**ஆதியாகமம் 7:24 - ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாள் பிரவாகித்துக்கொண்டிருந்தது.**

நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயத்தினால் முழு உலகமும் அழிக்கப்பட்ட சம்பவத்தை நிஜமாக நடைபெற்ற ஒரு நிகழ்வாக ஏற்றுக்கொள்ளாதவர்களதான், வேதாமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இச்சம்பவத்திலும் **முரண்பாடுகள்** இருப்பதாகக் கூறுகின்றனர். இச்சம்பவத்தில் சுட்டிக்காட்டப்படும் முக்கியமான **முரண்பாடு** அக்காலத்தில் **எத்தனை நாட்களுக்கு** ஜலப்பிரளயம் இருந்தது என்பதைப்பற்றியதாகும். ஏனெனில் ஆதியாகமம் 7:17ல் "ஜலப்பிரளயம் **நாற்பது நாள்** பூமியின் மேல் உண்டானது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால்

ஆதியாகமம் 7:24ன்படி "ஜலம் பூமியின்மேல் **நூற்றைம்பது நாள்** பிரவாகித்துக்கொண்டிருந்தது". இதனால் உண்மையில் எத்தனை நாட்களுக்கு ஜலப்பிரளயம் பூமியில் இருந்தது என்பதை சரியான விதத்தில் வேதத்தில் குறிப்பிடாததால் இச்சம்பவம் **முரண்பாடுடையதாக** மாத்திரமல்ல, ஒரு **கற்பனைக் கதையாகவும்** வேத விமர்சகர்களினால் கருதப்படுகின்றது.

நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளய சம்பவத்தில் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுபவர்கள், இச்சம்பவத்தை கவனித்து வாசிக்காதவர்களாகவே உள்ளனர். ஜலப்பிரளயம் ஏற்படுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்பு தேவன் நோவாவிடம். **நாற்பது நாட்கள்** பூமியில் மழை பெய்யும்" என்று தெரிவித்திருந்தார் (ஆதி 7:4) தேவன் சொல்லியிருந்தபடியே "**நாற்பது நாள்** இரவும் பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்தது" என்று 12ம் வசனம் கூறுகிறது. அந்த நாற்பது நாட்களும் பூமியில் ஜலப்பிரளயம் ஏற்பட்டது என்றே 17ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டள்ளது. **நாற்பது நாட்களாக** பெய்த மழையினால் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தினால் **பூமியில் 150 நாட்களுக்குத் தண்ணீர்** பிரவாகித்துக் கொண்டிருந்தது எனபதையே 28ம் வசனம் அறியத்ததருகிறது. எனவே இச்சம்பவத்தில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. **நாற்பது நாட்கள்** பெய்த மழையில் ஏற்பட்ட பிரளயம் 150 நாட்கள் பூமியில் தேங்கி இருந்தது. 150 நாட்களுக்குப் பின்னரதான் **ஜலம் வடிந்தது** என்று 8ம் அதிகாரம் 3ம் வசனத்தில் குறிப்பிடபட்டுள்ளது.

### *முரண்பாடுகள் இல்லை No. 12*

**ஆதியாகமம் 10:5, 20,31 - பாபேல் கோபுர சம்பவத்திற்கு முன்**

**உலகில் பல மொழிகள் இருந்தன**

**ஆதியாகமம் 11:1 - பாபேல் கோபுர சம்பவத்துக்கு முன்**

**உலகில் ஒரேயொரு மொழி மாத்திரமே இருந்தது**

ஆதியாகமப் புத்தகத்தில் அநேகர் சுட்டிக்காட்டும் முக்கியமான முரண்பாடுகளில் ஒன்று **மானிட மொழிகளைப் பற்றியதாகும்.** ஆதியாகமம் 10ம் அதிகாரத்தில் உலகில் **பல மொழிகள்** இருந்ததாக மூன்று தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆதி 10:5. 10:20. 10:31) ஆனால் அடுத்த அதிகாரம் இதை முரண்படுத்தும் விதத்தில் உலகெங்கும் **ஒரேயொருமொழியே** அதுவரையில் இருந்தாகக் கூறுவதோடு இவ்வதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த சம்பவமே உலகில் பல மொழிகள் உருவாகுவதற்கான காரணம் என்பதையும் அறியத்தருகின்றது (ஆதி 11:1, 11:6, 11:9) இதனால் இவ்விரு அதிகாரங்களும் ஒன்றையொன்று **முரண்படுத்துவதாக** வேத விமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஆதியாமம் 10ம் 11ம் அதிகாரங்களில் உள்ள **முரண்பாட்டை** விளக்கும் சில வேத ஆராச்சியாளர்கள் அக்காலத்தில் ஒவ்வொரு **ஜாதியினருக்கும்** இனைத்திருக்கும் **தனியான மொழிகள்** இருந்ததாகவும் அதேசமயம் தற்காலத்தில் ஆங்கிலம் உலகலாவிய **சர்வதேச மொழியாக** இருப்பது போல அக்காலத்தில் ஒரு உலகலாவிய **சர்வதேச மொழி** ஒன்று இருந்ததென்றும் கூறுகின்றனர். இதன்படி ஆதியாகமம் 10ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது **ஜாதிகளின் சொந்த மொழிகள்** என்றும் 11ம் அதிகாரத்தில் தேவனால் தாறுமாறக்கப்பட்டது. அக்காலத்தில் இருந்த **சர்வதேச மொழி** என்றும் வேத பண்டிதர்களால் விளக்கப்படுகின்றது.[1] ஆனால் இத்தகைய விளக்கத்திற்கு வேதத்தில் போதுமான **ஆதாரங்கள்** எதுவும் இல்லை. **ஒரு மொழியிலிருந்தே** ஏனைய மொழிகள் தோன்றின என்பதை தற்கால அராய்ச்சிகள் அறியதருவதானால் **ஆரம்பத்தில் பல மொழிகள்** இருந்தன என்னும் விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஆதியாகமம் 11ம் அதிகாரம் அறியதருவதைப்போல மனிதர்கள் பாபேல் என்னும கோபுரத்தைகட்டுவதற்கு முன்னர் உலகெங்கும் **ஒரே ஒரு மொழி** மாத்திரமே இருந்தது. (ஆதி 11:1)

உண்மையில் 10ம் 11ம் அதிகாரங்கள் **காலக்கிரம ஒழுங்கு முறையில்** எழுதப்படவில்லை. அதாவது 10ம் அதிகார சம்பவங்கள் நடைபெற்ற பின்னால் 11ம் அதிகார சம்பவங்கள் நடைபெறும் விதத்தில் வரிசை முறையில் இவ்வதிகாரங்கள் எழுதப்படவீல்லை. மேலும் 10ம் அதிகாரமும் ஆரம்பத்திலிருந்தே கடைசி வரை காலகிரம வரிசை ஒழுங்குமுறையில் இல்லை. இவ்வதிகாரம் மூன்று பகுதிகளாக உள்ளதோட ( 10:2-5, 10: 6-20 , 10:21-32) ஒரு பகுதி முடிவடையும் காலத்திலிருந்து **அடுத்தபகுதி ஆரம்பமாகாமல்** முதல் பகுதி எக்காலத்தில் ஆரம்பமானதோ **அக்காலத்திற்கு** மறுபடியுமாக செல்கின்றது. ஏனெனில் ஜலப்பிரளத்தின் பின்னர் நோவாவின் வம்சம் எவ்வாறு விருத்தியடைந்தது என்பதை அறியத்தரும் அவனுடைய மூன்று பிள்ளைகளின் வம்ச வரலாற்று அட்டவணைகளே இவ்வதிகாரத்தில் உள்ளன. (ஆதி. 10:1-2, 10:6, 10:21) இதனால் ஒவ்வொரு அட்டவனையும் ஒரே காலத்திலேயே அதாவது நோவாவின் மூன்று பிள்ளைகளான **சேம், காம், யாபேத்** என்போருடைய காலத்திலேயே ஆரம்பமாகின்றன. இவ்வட்வணைகளின்படி ஜலப்பிரளயத்தின் பின்னர் நோவினுடைய மூன்று பிள்ளைகளின் வம்சத்தினர் **உலகின் பல பகுதிகளிலும்** குடியேறியதோடு **வித்தியசமான மொழிகளை** பேசுகிறவர்களாகவும் இருந்தனர். (ஆதி 10:5, 10:20, 10: 32)

10ம் அதிகாரத்தில் நோவாவின் பிள்ளைகளுடைய வம்சத்தினர் மூலமாக அன்றைய கால மக்கள் **தனித்தனி இனங்களாகவும்** வெவ்வேறு **மொழிகளை பேசுகிறவர்களாகவும்** உலகின் பல பாகங்களிலும் வாழுகிறவர்களாகவும் இருந்ததை அறியதந்த ஆதியாகம ஆசிரியர் 11ம் அதிகாரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழ்ந்த மக்கள் எவ்வாறு வெவ்வேறு இடங்களுக்கு சென்றனர் என்பதையும் எவ்விதமாக பல மொழிகள் உருவாகின என்பதையும்

விளக்கியுள்ளார்[3]. உண்மையில் 10ம் அதிகாரம், 5ம், 20ம் 32ம் வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் எவ்வாறு ஏற்பட்டன என்பதையே 11ம் அதிகாரத்தின் முதல் 9ம் வசனங்களும் அறிய தருகின்றன.[4] 10ம் அதிகாரத்தை வாசிப்பவர்கள் உடைய உள்ளத்தில் எழும் கேள்விகளுக்கான பதிலாகவே 11ம் அதிகாரம் உள்ளது. அதாவது ஓர் இடத்தில் வாழ்ந்த நோவாவின் பிள்ளைகளுடைய வம்சத்தினர் ஏன் வேறு இடங்களுக்கு சென்றனர்? ஒரு மொழியை பேசியவர்கள் எவ்வாறு பல மொழிகளை பேச தொடங்கினார்கள் என்னும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்தில் 11ம் அதிகாரம் எழுதப்பட்டுள்ளது. இதனால் இவ்வதிகாரம் 10ம் அதிகாரத்தை எவ்விதத்திலும் **முரண்படுத்தப்படவில்லை.**

---

1) C.H. Gordon before Columbus; links between the old world and ancient Amercia. PP 165-166
   C.H. Gordon "Eblaas Back Ground for the Old Testament"
   In Congress Volume: Jerusalem P 295, V.P. Hamilton
   Jenesis 1-17; The New International Commentary on the old Testament P 350
2) J.P. Free Archaeology and Bible History. PP 46-47
3) J.E. Hartely, Jenesis; New International Biblical Commentary P - 126
   J.W. Ferguson, Jenesis; Ritchiv old Testament Commentary P - 84
4) H.M. Moris, The Jenesis Record; A Scientific and Devotional Commentary opn the Book of Beginnings P - 249

### *முரண்பாடுகள் இல்லை No. 13*

**ஆதியாகமம் 25:1-கேத்தூராள் என்பவள் ஆபிரகாமின் மனைவி**

**1 நாளாகமம் 1:32 - கேத்தூராள் என்பவள் ஆபிரகாமின் மறுமனையாட்டி**

வேத விமர்சகர்களின் பார்வையில் தென்பட்டுள்ள இன்னுமொரு வேதாகம முரண்பாடு **கேத்தூராள்** என்னும் பெண்ணை பற்றியது ஆதியாகமம் 25:1ல் இவள் ஆபிரகாமின் மனைவியா**க** இருக்கின்றாள் ஆனால் 1 நாளா 1:32ல் இவள் ஆபிரகாமின் **மறு மணையாட்டியாக** குறிப்பிடப்பட்டுள்ளாள். இதனால் வேதாகமத்தில் **கேத்தூராள்** என்னும் பெண்ணுக்கும் **ஆபிரகாமுக்கும்** இடையிலான உறவு முறையில் **முரண்பாடு** உள்ளதாக வேத விமர்சகர்கள் கூறுகின்றனர்.

வேத விமர்சகர்கள் கூறுகின்ற விதமாக ஆபிரகாமுக்கும் **கேத்தூராளுக்கும்** இடையிலான உறவு முறையில் எவ்வித **முரண்பாடுகளும்** இல்லை. நாளாமகம் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கேத்தூராள் ஆபிரகாமின் **மறுமனையாட்டியாகவே** இருந்தாள். ஆதியாகமம் 25:6ல் **இவளும் ஆகாரும்** ஆபிரகாமின் **மறு மனையாட்டிகள்** என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆனால் **சாராளுடைய** மரணத்தின் பின்னர் அதுவரை காலமும் மறுமனையாட்டியாக இருந்த **கேத்தூராளை ஆபிரகாம் மணமுடித்துள்ளான்.** இதனால்தான் சாராளின் மரணத்தின் பின்னர் ஆதியாகமம் 25:1ல் ஆபிரகாம் **கேத்தூராள்** என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரியையும் **விவாகம்** பண்ணியிருந்தான் என குறிப்பிடப்பட்டிருந்தது.

சில வேத ஆராய்ச்சியாளர்கள் சாராள் உயிரோடு இருக்கும் காலத்திலேயே ஆபிரகாம் கேத்தூராளை விவாகம் பண்ணியிருக்கவேண்டும் என்று கருதுகின்றனர். ஈசாக்கு பிறப்பதற்கு முன்னே ஆபிரகாம் வயது முதிர்ந்தவனாகவும் தாம்பத்திய உறவில் ஈடுபட முடியாதவனாகவும இருந்ததினால் (ரோமா 5:19) **சாரளுடைய மரணத்தின் பின்னர் அவன் கேத்தூராளை மணமுடித்து 6 பிள்ளைகளை பெற்றிருக்கமுடியாது** (ஆதி 25:2) எனவே சாராள் உயிரோடிருந்த காலத்திலேயே **கேத்தூராள்** ஆபிரகாமின் **மறுமனையாட்டியாக** இருந்திருக்க வேண்டும். இதனால்தான் 1 நாளா 1:32ல் இவள் ஆபிரகாமின் **மறுமனையாட்டி** என்று குறிப்பிடப்பட்டுள்ளாள். ஆனால் சாராளின் **மரணத்தின் பின்** தனித்து விடப்பட்ட ஆபிரகாம் ஆதியாகமம் 25:1 அறியத்தருவது போல இவளை **விவாகம்** பண்ணியுள்ளான்.

## *முரண்பாடுகள் இல்லை No. 14*

**ஆதியாகமம் 50:13 ஏத்தியனாகிய எப்பெரோனிடத்தில் ஆபிரகாம் வாங்கிய மக்பேலா என்னும் நிலத்தில் யாக்கோபு அடக்கம்பண்ணப்பட்டான்**

**அப்போஸ்தலர் 7:15-16 சீகேமின் தகப்பனாகிய ஏமோருடைய சந்ததியாரிடத்தில் ஆபிரகாம் வாங்கிய கல்லறையில் யாக்கோபு அடக்கம்பண்ணப்பட்டான்**

வேதாகமத்தில் முரண்பாடுகள் உள்ளன என்று வாதிடும் வேத விமர்சகர்கள் சுட்டிக்காட்டும் பகுதிகளில் ஒன்று, **யாக்கோபு** அடக்கம்பண்ணப்பட்ட இடத்தைப் பற்றியது. ஆதியாகமம் 50:13ன்படி ஏத்தியனாகிய எப்பெரோனிடத்தில் ஆபிரகாம் வாங்கிய "மக்பேலா" என்னும் நிலத்தில் **யாக்கோபு அடக்கம்** பண்ணப்பட்டுள்ளான். ஆனால் புதிய ஏற்பாட்டில் இச்சம்பவத்தைச் சுட்டிக்காட்டும் **ஸ்தேவான்**, சீகேமின் தகப்பனாகிய ஏமோருடைய சந்ததியாரிடத்தில் ஆபிரகாம் வாங்கிய கல்லறையில் **யாக்கோபு** அடக்கம் பண்ணப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டள்ளார் (அப் 7:15-16) சில வேத ஆராய்சியாளர்கள்கூட **ஸ்தேவானும்** அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை எழுதிய **லூாக்காவும்** இவ்விஷயத்தில் பெரியதொரு **சரித்திர பிழையை** விட்டுள்ளதாகக் கருதுகின்றனர்".[1]

வேதாகம சரித்திரத்தின்படி முற்பிதாக்களுக்கு (அதாவது அபிரகாம். யாக்கோபு, ஈசாக்கு என்போருக்கு) **கானான்** தேசத்தில் **இரண்டு கல்லறை** பூமிகள் இருந்துள்ளன. இவற்றில் ஒன்று, ஆபிரகாம் தன்னுடைய மனைவி சாராள் மரித்தபோது அவளை அடக்கம் பண்ணுவதற்காக ஏத்தியனாகிய **எப்பெரோனிடத்தில்** விலைகொடுத்து வாங்கிய நிலமாகும் (ஆதி. 23:3-20) ஆபிரகாமின் மனைவி **சாராள்** மட்டுமல்ல, அவனுடைய மகன் **ஈசாக்கு,** மருமகள் **ரெபேக்காள்,**

பேரன் **யாக்கோபு** மற்றும், யாக்கோபின் மனைவி **லேயாள்** என்பவர்களும் இவ்விடத்திலேயே அடக்கம் பண்ணப்பட்டனர் (ஆதி 25:9. 49:31, 50:13)[2] முற்பிதாக்களின் இரண்டாவது கல்லறை பூமி சீகேமின் தகப்பனாகிய ஏமோருடைய சந்ததியாரிடத்தில் யாக்கோபு வாங்கிய நிலமாகும் (ஆதி 33:18-20) இந்நிலத்திலுள்ள கல்லறையிலேயே எகிப்திலிருந்து கொண்டுவரப்பட்ட **யோசேப்பின்** எலும்புகள் வைக்கப்பட்டதோடு. இது அவனுடைய சந்ததியினரின் **குடும்பக் கல்லறையாகவும்** இருந்தது (யோசு 24:32) அப்போதலர் 7ம் அதிகாரத்தில் பழைய ஏற்பாட்டுச் சரித்திரத்தை **ஸ்தேவான்** சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளதினால், **முற்பிதாக்களின்** இரண்டு கல்லறை பூமிகளையும் அவர் வேறுபடுத்திக் குறிப்பிடவில்லை”[3] அதனால் ஏற்பட்ட குழப்பம்தான் இது.

உண்மையில் தங்களுடைய மூதாதையர் **சீகேமிலுள்ள கல்லறை பூமியில்** அடக்கம்பண்ணப்பட்டனர் என்பதையே அப்போஸ்தலர் 7:15-16ல் ஸ்தேவான் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் **எபிரோனில்** உள்ள கல்லறையில் யாகோபு அடக்கம்பண்ணப்பட்டதை ஸ்தேவான் **வேறுபடுத்தி** காண்பிக்கவில்லை. எனினும் சீகேமியிலுள்ள நிலத்தை **ஆபிரகாம்** வாங்கியதாக **ஸ்தேவான்** குறிப்பிட்டுள்ளது **தவறாகவே நமக்கு தென்பட்டுள்ளது** (அப். 7:16) ஏனெனில் இது யாக்கோப்பு வாங்கீய நிலமாகவே அதியாகமம் 33:18-20ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இது ஏற்கனவே **ஆபிரகாமினால்** வாங்கப்பட்ட நிலம் என்பதை **முதலாம் நூற்றாண்டை** சேர்ந்த **யூதர்களுடைய பாரம்பரிய குறிப்புகள்** அறியதருகின்றன. **ஆபிரகாம்** முதற்தடவையாக கானானுக்கு சென்றபோது சீகேமிலுள்ள இந்நிலத்தை வாங்கி அங்கு கர்த்தருக்கு பலிபீடமொன்றை கட்டினான். (ஆதி 12:6-7) ஆதியாகமத்தில் ஆபிரகாம் இந்நிலத்தை வாங்கியதைப்பற்றி குறிப்பிடப்படாவிட்டாலும் அக்காலத்தில் கானானியர் வாழ்ந்த இந்நிலத்தில் அவன் **பலிபீடமொன்றை கட்டியது** அவன் அந்த நிலத்தை வாங்கி உள்ளதையே அறியதருகின்றது எனினும் அதன் பின்னர் **ஆபிரகாம் வேறிடத்திற்கு** சென்றதினால் இந்நிலத்தை **எமோருடைய சந்ததியார்** ஆக்கிரமித்துக்கொண்டனர். இதனால் பிற்காலத்தில் அவர்களிடமிருந்து **யாக்கோபு** இந்நிலத்தை திரும்ப வாங்கினான். இது பெயர்செபாவில் ஆபிரகாம் தோன்டிய துறவுகளை (ஆதி 21:27-34) பிற்காலத்தில் அவனுடைய மகன் ஈசாக்கு மறுபடிமாக வாங்க வேண்டியதாயிருந்தது (ஆதி 26:23-33) உண்மையில் **சீகேமில்** உள்ள அந்த நிலத்தை **ஆபிரகாமினுடைய** பெயரிலேயே யாக்கோபு வாங்கியுள்ளான். இதனால் இந்நிலம் ஆபிரகாமினால் வாங்கப்பட்ட யூதர்களுடைய பாரம்பரிய குறிப்பில் உள்ளது.

---

1) G. Kradel Acts; Augsburg Commentary on the New Testament P 144

2) எபிரோம் என்னும் இடத்தில் உள்ள இக்குகையின்மீது தற்பொழுது ஒரு இஸ்லாமிய மசூதி கட்டப்பட்டுள்ளது. (J.J. Davis Paradise Prison; Studied in Jenesis P-223

3) F.F Bruse Acts; The New International Commentary on the New Testament P. 137
J.P. Polhill Acts; The New American Commentary P 193

**யாத்திராகமம் 6:2-3 யெகோவா என்னும் நாமத்தில் தேவன் முற்பிதாக்களுக்கு தம்மை வெளிப்படுத்தவில்லை.**

**ஆதியாகமம் 22:14-16 யெகோவா என்னும் நாமத்தை முற்பிதாக்கள் அறிந்திருந்தனர்**

யாத்திராகமம் புத்தகத்தை வாசிக்கும் போது தேவன் மோசேக்கே முதற் தடவையாக தம்முடைய நாமம் **யெகோவா** (மூலமொழியின் சரியான உச்சரிப்பின்படி **யாவே**) என்பதை வெளிப்படுத்தியுள்ளார் என்னும் எண்ணம் நமக்கு ஏற்படுகின்றது. யாத்திராகமம் 6:2-3ல் தேவன் மோசேயை நோக்கி நான் யெகோவா சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான்ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனம் ஆனேன். ஆனாலும் **யெகோவா** என்னும் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை என்று குறிப்பிடபட்டுள்ளது. இதற்கு முற்பட்ட காலத்தில் **யெகோவா** என்னும் பெயரால் தாம் முற்பிதாக்களுக்கு (அதாவது ஆபிரகாம, ஈசாக், யாக்கொபு என்பவர்களுக்கு) வெளிப்படவில்லை என்று **தேவனே கூறுவதனால்** ஆதியாகமம் 22:14ல் ஆபிரகாம் தேவனை **யெகோவா** என்று அழைத்துள்ளது **பெரியதொரு முரண்பாடாகவும்** தேவனுடைய கூற்றையே பொய்யாக்குவதாகும் இருப்பதாக வேத விமர்சகர்கள் கூறிகின்றனர்.

உண்மையில் ஆதியாகம புத்தகத்தில் 162 தடவைகள் **யெகோவா** என்னும் பெயர் (மூல மொழியில் **யாவே** தமிழில் **கர்த்தர்**) உள்ளது. ஆனால் **சர்வ வல்லமையுள்ள தேவன்** என்னும் பெயர் 6 தடவைகள் மாத்திரமே உள்ளது. இதனால் தேவன் மோசேயிடம் சர்வ வல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தரிசனம் ஆனேன். ஆனாலும் யெகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்பட வில்லை என்று மோசேயிடம் கூறுவது நமக்கு அதிக குழப்பத்தையே ஏற்படுத்துகிறது. மேலும் தேவன் ஆபிரகாமுக்கும் யாக்கோபுக்கும் யெகோவா (யாவே- கர்த்தர்) என்னும் பெயரின் மூலமாகவே தம்மை வெளிப்படுத்தியுள்ளதை ஆதியாகமம் 17:7, 28:13 என்னும் வசனங்கள் அறிய தருகின்றன. இதனால் ஆபிரகாம் ஈசாக்கு, யாக்கோபு என்னும் முற்பிதாக்கள் இப்பெயரை நன்றாக அறிந்தவர்களாவே இருந்தனர் என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாதுள்ளது.

உண்மையில் யாத்திராகமத்திலுள்ள தேவனுடைய கூற்று அதிக சர்சைக்குறியதாக உள்ளது. தற்காலத்தில் **வித்தியாசமான** கால கட்டத்தில் எழுதப்பட்ட **நான்கு ஆவணங்கள்** ஒன்றாக சேர்க்கப்பட்ட நிலையிலேயே வேதாகமத்தின் **முதல் ஐந்து புத்தகங்களும்** இருந்தன என்னும் கருத்து வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் பிரபலமடைந்துள்ளது. இதன்படி வித்தியாசமான **தேவனுடைய பெயர்கள்** வித்தியாசமான **கால கட்டத்தில்** எழுதப்பட்ட

**ஆவணங்களில்** இருந்து வந்துள்ளதால் இவற்றில் முரண்பாடுகளை பார்ப்பது அர்த்தமற்றது என்று கருதப்படுகின்றது. வேதாமத்தின் முதல் ஐந்து புத்தகங்களில் உள்ள **முரண்பாடுகளை** இலகுவாக விளக்குவதற்கு இக்கருத்து ஏற்றதாக இருந்தாலும் இது **வேத அராய்ச்சியாளர்களின் ஊகமே தவிர உண்மையல்ல.** வேத அராய்ச்சியாளர்கள் சொல்லுகின்ற விதமாக **நான்கு ஆவணங்கள்** இருந்ததற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை.

சில வேத ஆராய்ச்சியாளர்கள் யாத்திராகமம் 6:3ல் உள்ள தேவனுடைய கூற்று ஒரு சந்தேகத்திற்குரிய கேள்வியாகவே மொழிபெயர்க்க வேண்டும் என்று கூறுகின்றனர். இதன்படி இவ்வசனத்தின் இரண்டாவது வாக்கியம் ஆனாலும் **யெகோவா** என்றும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்பட வில்லையா? என தேவன் கேட்கும்போது கேள்வியாக உள்ளது. உண்மையில் இவ்விதமாக தேவன் **முற்பிதாக்களினால் அறியப்பட்டிருந்தார்** என்பதை ஆதியாகமம் உறுதிபடுத்துகிறது . ஆனாலும் தேவனுடைய கூற்றை ஒரு கேள்வியாக்குவதற்கு இலக்கண ரீதியாக சுட்டிக்காட்டப்படும் காரணங்கள் திருத்திகரமாக இல்லை. இதனால் தான் வேதாகம மொழிபெயர்ப்பில் தேவனுடைய கூற்று கேள்வியாக இருக்கும் விதத்தில் குறிப்பிடவில்லை.

தேவனுடைய பெயர் யெகோவா (மூலமொழியில் யாவே) என்பதை முற்பிதாக்கள் அறிந்திருந்ததினால் மோசேக்கே இப்பெயர் முதற்தடவையாக வெளிபடுத்தப்பட்டது என்று யாத்திராகமம் 6:3ல் கூறவில்லை உண்மையில் தேவனுடைய பெயரல்ல அப்பெயரின் **மகத்துவமும் வல்லமையும் சிறப்பம்சமுமே** மோசேக்கு முதற்தடவையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எபிரேய மொழி வழக்கில் நாமம் என்னும் சொல் ஒருவருடைய பெயரைமாத்திரமல்ல அருடைய **தன்மையையும் (குணாதிசயத்தையும்)** வெளிப்படுத்தும் விவரமாய் இருந்தது எனவே யாத்திராமம் **6:2-3ல்** தேவன் மேசேயை நோக்கி நான் யெகோவா சர்வ வல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன். ஆனாலும் யெகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியபட வில்லை. என்று கூறும்போது தம்முடைய பெயர் **யெகோவா** என்றும் (நான் யகோவா) முற்பிதாக்களுக்கு தம்மை சர்வ வல்லமையுள்ளவராக வெளிப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அதாவது முற்பிதாக்கள் தேவனுடைய பெயர் யெகோவா என்பதை அறிந்திருந்தாலும் அவர் சர்வ வல்லமையுள்ளவர் என்பதையே அறிந்திருந்தனர். ஆனால் அவர்கள் யெகோவா என்னும் பெயரின் முழுமையான அர்த்தத்தை **அறியாதவர்களாய்** இருந்தனர். **இப்பெயரின் அர்த்தம்** முதல் தடவையாக **மோசேக்கு** வெளிப்படுத்தப்பட்டது. இதைத்தான் ஆனாலும் **யெகோவா** என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை என்னும் வாக்கியம் குறிப்பிடுகின்றது.

உண்மையில் யெகோவா மூல மொழியில் **யாவே** என்னும் பெயரின் அர்த்தம் யாத்திராகமம் 3ம் அதிகாரத்திலேயே முதல் தடவையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது .இஸ்ரவேல் மக்களை விடுவிப்பதற்காக தேவன் மோசேயை அனுப்பும்போது இப்பெயரின் அர்த்தத்தை அவர் அவனுக்கு விளக்கி கூறினார். இதனால்தான் **உம்முடைய பெயர் என்ன**? என்று **மோசே** கேட்டபோது **இருக்கிறவராகவே இருக்கின்றேன்** என்று தம்முடைய **பெயரின் அர்த்த்தை** அவனுக்கு வெளிப்படுத்தினார் (யாத் 3:13-14) இதனால்தான் **இருக்கிவராக இருக்கிறேன்** என்று மோசேவுடனே **சொல்லி இருக்கிறேன்** என்பவர் என்னை உங்கள் இடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்று கூறிய அதே **தேவன்** (யாத் .3:14) அடுத்த வசனத்தில் மேலும் **தேவன் மோசேயை நோக்கி** ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின்தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்கள் இடத்துக்கு அனுப்பினளார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்வாயாக. (யாத் 3:15) என்று குறிப்பிட்டுள்ளார். இவ்விரு வசனங்களிலும் **தேவனுடைய இரண்டு** பெயர்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதாக நாம் கருதலாகாது. 15ம் வசனத்தில் உள்ள கர்த்தர் (யாவே அல்லது யெகோவா) என்னும் பெயரின ் அர்த்தமே 14ம் வசனத்தில் **இருக்கிக்கிறவராகவே இருக்கிறேன்** என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வேத விமர்சகர்கள் கூறுகின்ற விதமாக **யெகோவா** (யாவே) என்னும் பெயர் முதற் தடவையாக **மோசேக்கு** வெளிபடுத்தப்பட்டிருந்தால் தேவன் அவனை அனுப்பும் பணியை அவனால் செய்யமுடியாதிருந்திக்கும். ஏனெனில் எகிப்திலிருந்த இஸ்ரவேல் மக்கள் இப்பெயரை **முதற்தடவையாக** மோசேயின் மூலமாகவே அறிந்திருந்தால் மோசே தங்களுடைய தெய்வத்திடமிருந்து அல்ல **வேறு ஒரு தெய்வத்திடமிருந்தே** வந்திருக்கின்றான் என்று அவனுடைய வார்த்தைக்கு செவி கொடுத்திருக்க மாட்டார்கள். மேலும் எகிப்திய அரண்மனையில் வளர்ந்த மோசேக்கு **யெகோவா** (யாவே) என்னும் பெயர் புதியதாகஇருந்திருந்தாலும் இஸ்ரவேல் மக்களுக்கு **இப்பெயர் புதியதாக** இருக்கவில்லை. 15ம் வசனத்தில் இறுதியில் என்றைக்கும் இதுவே என் நாமம் தலைமுறை தலைமுறைதோறும் என் பெயர் பிரஸ்தாபம் என்றும் தேவன் தெரிவித்துள்ளதினால், மோசேக்குட்பட்ட காலத்திலும் யெகோவா (யாவே) என்பதே தேவனுடைய பெயராய் இருந்துள்ளது என்பது தெளிவாகின்றது. இதனால் மோசேயின் காலத்து இஸ்ரவேல் மக்களும் அவர்களுடைய முற்பிதாக்களும் தேவனை இப்பெயரினாலேயே அறிந்துள்ளனர்.

### *முரண்பாடுகள் இல்லை No. 16*

**எண்ணாகமம் 25:9 வேசித்தன பாவத்தில் செத்தவர்கள் 24,000 பேர்**

**1 கொரிந்தியர் 10:8 - வேசித்தன பாவத்தில் செத்தவர்கள் 23.000 பேர்**

இஸ்ரவேல் மக்கள் சித்தீம் என்னும் இடத்தில் விக்கிரக வழிபாட்டில் ஈடுபட்டு மோவாபியப் பெண்களோடு **வேசித்தனம்** செய்தபோது ஏற்பட்ட வாதையில் 24000 பேர்

செத்ததாகஎண்ணாகமம் 25:9ல் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் இச்சம்பவத்தை பவுல் 1 கொரி 10:8ல் சுட்டிக்காட்டும்போது வாதையில் செத்தவர்கள் 23000 பேர் என்று எழுதியுள்ளார் . இதனால் ஒரு சம்பவத்தை பற்றிய இவ்விரு குறிப்புகளும் ஒன்றை ஒன்று **முரண்படுத்துவதாக** உள்ளது. சில வேத ஆராய்ச்சியாளர்கள் பவுல் **ஞாபகமறதியால்** மரித்தவலர்களின் எண்ணிக்கையை **தவறுதலாக** குறிப்பிட்டுள்ளதாக கருதுகின்றனர். வேறு சிலர் இச்சம்பவத்தின் பின்னர் எண்ணாகமம் 26ம் அதிகாரத்தில் யுத்தத்துக்கு செல்லகூடிய மக்களின் எண்ணிக்கை 23000 என்று கனிப்பிடப்படுள்ளதினால் (எண் 26:62) பவுல் தவறுதலாக இதை வாதையினால் மரித்தவர்களின் எண்ணிக்கையாக 1 கொரி. 10:8ல் குறிப்பிட்டுள்ளதாக கருதுகின்றனர். ஆனால் இத்தகைய விளக்கங்கள் வேதாகம புத்தகங்கள் ஆவியின் ஏவுதலினால் எழுதப்பட்டுள்ளன எனும் சத்தியத்தை மறுதலிக்கும் அல்லது **முரண்படுத்தும்** விதத்தில் இருப்பதனால் இவைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளாக இல்லை.

எண்ணாகம புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளபடி சித்தீம் என்னும் இடத்தில் இஸ்ரவேல் மககள் பாவம் செய்த போது மரித்தவர்களின் எண்ணிக்கை 24000 பேர் என்பதை மறுப்பதற்கு இல்லை. தற்போதிருக்கும் வேதாகமத்தின் சகல கையெழுத்து பிரதிகளிலும் 24000 பேர் மரித்ததாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பவுல் இச்சம்டபவத்தை எழுதும்போது ஒரு நாளில் எத்தனை பேர் மரித்தார்கள் என்றே குறிப்பிட்டுள்ளார். எனவே 1. கொரி 10:8 அறியத்தருவதுபோல **ஒரு நாளில்** மரித்தவர்களின் எண்ணிக்கையே 23000 ஆகும். எண்ணாகம புத்தகத்தில் இச்சம்பவத்தில் **மொத்தமாக மரித்தவர்களின்** எண்ணிக்கையே 24000 என்று குறிப்பிடப்பட்டுள்ளது (என் 25:1-9) உண்மையில் ஒரு நாளில் எவ்வளவு பேர் மரித்தார்கள் என்று கூறும் பவுல் (1 கொரி 10:8) அதன் பின்னர் மோசேயின் அறிவுறுத்தலின்படி துக்கிலிடப்பட்டு கொள்ளப்பட்ட மக்களின் எண்ணிக்கையை தன்னுடைய குறிப்பில் சேர்க்கவில்லை எனவே பவுலினுடைய கனிப்பீட்டின்படி 1000 பேர் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டதினால் இதனை குறைத்து நேரடியாக தேவனால்அழிக்கப்பட்டவவர்களின் எண்ணிக்கை 23000 என்று 1 கொரி 10:8ல் குறிப்பிடடுள்ளார்.

## *முரண்பாடுகள் இல்லை No. 17*

**எண்ணாகமம் 33:38-39 ஆரோன் ஓர் என்னும் மலையில் மரணமடைந்தான்**

**உபாகமம் 10:6 ஆரோன் மோசேரா என்னும் இடத்தில் மரணமடைந்தான்**

மோசே எழுதிய புத்தகங்களில் ஆரோன் மரணமடைந்த இடம்பற்றிய குறிப்புகள் ஒன்றையொன்று **முரண்படுத்துவதாக** வேத விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். உண்மையில் மோசே எழுதிய எண்ணாகம புத்தகத்தில் ஆரோன் **ஓர்** என்னும் மலையில் மரித்ததாககுறிப்பிடப்பட்டுள்ளது ( எண். 33:38-39) ஆனால் மோசே எழுதிய இன்னொரு

புத்தகமான **உபாகமத்தில் மோசேரா** என்னும் இடத்திலேயே ஆரோன் மரித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. (உபா 10:6)

ஆரோன் மரணமடைந்த இடம் பற்றிய இரண்டு குறிப்புகளும் ஒன்றைஒன்று **முரண்படுத்தவில்லை.** ஏனெனில் உபாகமம் 10:6ல் குறிப்பிடப்பட்டுள்ள **மோசேரா** என்னும் பிரதேசத்திலேயே **ஓர்** என்னும் மலை உள்ளது. எண்ணாகம புத்தகத்தில் இரண்டு தடவை இரண்டு இடங்களில் இம்மலையில்ஆரோன் மரித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ( எண். 20:22-29, 33:38-39) உபாகமம் 10:6ல் இம்மலையின் பெயர் குறிப்பபிடபடாவிட்டாலும் கூட இம்மலை இருந்த பிரதேசத்தில் அதாவது **மோசேரா** என்னும் இடத்தில் **ஆரோன் மரித்ததாக** குறிப்பிடப்பட்டுள்ளது. மோசே ஏற்கனவே ஆரோனின் மரணத்தை பற்றி விரிவாக எண்ணாகம புத்தகத்தில் குறிப்பிடும்போது சுருக்கமாக இச்சம்பவத்தை எழுதியுள்ளமையால் மலையின் பெயரை குறிப்பிடாமல் **மலை இருந்த பிரதேசத்தை** மட்டும் குறிப்பிட்டுள்ளார்.

## *முரண்பாடுகள் இல்லை No. 18*

**1 ராஜாக்கள் 5:16 சாலமோனின் தலைமை விசாரிப்புக்காரர் 3300 பேர்**

**2 நாளாகமம் 2:2 சாலமோனின் தலைமை விசாரிப்புகாரர் 3600 பேர்**

பழைய ஏற்பாட்டின் சரித்திர புத்தகத்தில் வேத விமர்சகர்கள் சுட்டிக்காட்டும் இன்னுமொரு **முரண்பாடு** சாலமோனின் தலைமை விசாரிப்புகாரரின் எண்ணிக்கை பற்றியதாகும் 1 ராஜாக்கள் 5:16ன்படி சாலமோனுக்கு 3300 தலைமை விசாரிப்புகாரர் இருந்துள்ளனர். ஆனால் இவ்விஷயம் **நாளாகம** புத்தகத்தில் 3600 என்று குறிப்பிடப்ட்டுள்ளது. 2 நாளா 2:2 இதனால் இது வேதாகமத்தில் உள்ள இன்னுமொரு முரண்பாடாக உள்ளது சாலமோனுடைய தலைமை விசாரிப்புகாரருடைய எண்ணிக்கை பற்றிய இன்னுமொரு குறிப்பு ராஜாக்கள் புத்தகத்திலும் மற்றும் **நாளாகம** புத்தகத்திலும் உள்ளது 1 ராஜாக்கள் 9:23ல் 550 தலைமை விசாரிக்காரர் இருந்துள்ளனர். நாளாகம புத்தகத்தில் 250 தலைமை விசாரிப்புக்கார் இருந்துள்ளதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. (2 நாளா 8:10) எனவே ராஜாக்களின் புத்தகத்தில் உள்ள இரண்டு குறிப்புகளும் வித்தியாசமானவைகளாகவே உள்ளன. ஆனால் ராஜாக்களில் உள்ள இரண்டு குறிப்புகளையும் ஒன்றாக சேர்த்தால் சாலமோனுக்கு மொத்தமாக 3850 தலைமை விசாரிப்புகாரர் இருந்துள்ளதை அறிந்திடலாம். (1 ராஜா 5:16 - 3300 + 1 ராஜா 9:23 -- 550 = 3850 பேர்கள்) இதைபோலவே நாளாகம புத்தகத்தில் உள்ள இரண்டு குறிப்புகளையும் சேர்த்தால் தலைமை விசாரிப்புகாரரின் மொத்த எண்ணிக்கை ராஜாக்களில் உள்ளதைபோலவே 3850 ஆக உள்ளது. (2 நாளா 2:2 3600 - 2 நாளா + 8:10 - 250 = 3850) எனவே ராஜாக்களிலும் நாளாகமத்திலும் சாலமோனுக்கிருந்த தலைமை விசாரிப்புகாரரின் மொத்த தொகையில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை தெளிவாகின்றது.

சாலமோனுடைய தலைமை விசாரிப்புகாரரின் மொத்த தொகை ராஜாக்களிலும நாளகமத்திலும் ஒரே அளவாக உள்ள போதிலும் இவர்கள் இரு பகுதியினராக குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு இடங்களிலும் இரு புத்தக குறிப்புகளும் ஒன்றை ஒன்று முரண்படுத்துகின்றன என்பதை மறுப்புதற்கில்லை. இதற்கு காரணம் இரண்டு புத்தகங்களும் வித்தியாச முறையில் சாலமோனுடைய தலைமை விசாரிப்புகாரரை பிரித்துள்ளது. நாளாகம புத்தகம் தலைமை விசாரிப்புகாரரில் கானனியர் எவ்வளவு பேர் இருந்தனர் என்றும் இஸ்ரவேலர்கள் எவ்வளவு பேர் இருந்தனர் என்றும் பிரித்துகுறிப்பிட்டுள்ளது. இதன் படி 3600 கானானிய தலைமை விசாரிப்புகாரரும் (2 நாளா 2:2) 250 இஸ்வேலிய தலைமை விசாரிபப்புகாரர்கள் (2 நாள் 8:10 ) மொத்தம் 3850 பேர் சாலமோனுக்கு இருந்துள்ளனர். ஆனால் ராஜாக்களின் புத்தகம் சாலமோனுடைய 3850 தலைமை விசாரிப்புகாரர்களையும் இவர்களுடைய இனத்தை அடிப்படையாக கொண்டு பிரிக்காமல் இவர்களின் தராதரத்தை அடிப்படையாக கொண்டு பிரித்துள்ளது. இதன்படி சாலமோனுடைய 3850 தலைமை விசாரிப்புகாரரின் தாழ்வான நிலையில் உள்ளவர் 3300 பேரும் (1 ராஜா 5:16) உயர்வான நிலையில் உள்ளவர் 550 பேரும் (1 ராஜா 9:23) இருந்துள்ளனர்.

## *முரண்பாடுகள் இல்லை No. 19*

**12 சாமுவேல் 16:10- 11, 17:12 - ஈசா என்பவனுக்கு தாவீது உட்பட மொத்தம் 8 பிள்ளைகள் இருந்தனர்**

**1 நாளா 2:13 -15 ஈசா என்பவனுக்குபு தாவீது உட்பட மொத்தம் 7 பிள்ளைகள் இருந்தனர்.**

பழைய ஏற்பாட்டின் சரித்திர புத்தகங்களான சாமுவேல் புத்தகத்துக்கும் நாளகமத்திற்கும் இடையில் காணப்படும் **முரண்பாடுகளில்** ஒன்று தாவீதின் தகப்பனான **ஈசாய்** என்பவனுடைய **பிள்ளைகளின் எண்ணிக்கையோடு சம்பத்தப்பட்டது.** சாமுவேலின் புத்தகத்தில் தாவீது உட்பட அவனுடைய தகப்பகன் ஈசா என்பவனுக்கு 8 பிள்ளைகள் இருந்துள்ளனர் ( சாமு 16:10-11, 17:12) ஆனால் **நாளாகம** புத்தகத்தில் வம்ச வரலாற்று அட்டவனையில் ஈசாய்க்கு தாவீது உட்பட மொத்த 7 பிள்ளைகள் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளனர். (1 நாளா 2:13 -15) இதனால்வேதாகம சரித்திரம் நம்பகமற்றது என்று வேத விமர்சகர்கள் கருதுகின்றனர்.

சாமுவேலின் புத்தகம் அறிய தருவதுபோல ஈசாய்கு மொத்தம் 8 பிள்ளைகளே இருந்தனர். ஆனால் **இவர்களில் ஒருவன்** பிள்ளை யற்றவனாய் மரித்ததாக யூதர்களுடைய பாரம்பரிய குறிப்பு கூறுகிறது இதனால் பிறகாலத்தில் நாளாகம புத்தகத்தை எழுதியவர் வம்ச வரவலாற்று

அட்டவனையில் **பிள்ளையில்லாமல் மரித்த மகனை தவிர்த்து** ஈசாய்யின் **7 பிள்ளைகளின்** பெயர்களை மாத்திரம் குறிப்பிட்டுள்ளார் எனவே இவ்விசயத்தை அறியாத நிலையில் சாமுவேல் புத்தகத்திற்கும் நாளாகமத்திற்கும் இடையில் ஈசாய்யின் பிள்ளைகளின் எண்ணிக்கை **முரண்பாடு** இருப்பதாக கூறுவது அர்த்தமற்றது.

***முரண்பாடுகள் இல்லை No. 20***

**1 ராஜாக்கள் 9:28 ஒப்பிரிலிருந்து சாலமோனுக்கு**
**420 தாலந்து பொன் கொண்டு வரப்பட்டது**

**2 நாளாகமம் 8:18 ஒப்பிரிலிருந்து சாலமோனுக்கு**
**450 தாலந்து பொன் கொண்டுவரப்பட்டது.**

பழைய ஏற்பாட்டின் சரித்திர புத்தகங்களின் காணப்படும் இன்னுமொரு முரண்பாடு ஓப்பீர் எண்ணும் இடத்திலிருந்து கொண்டு வரப்பட்ட **தங்கத்தின்** அளவு பற்றியதாகும் 1 ராஜாக்கள் 9:29ல் **420 தாலந்து** பொன் கொண்டுவரப்பட்டது ஆனால் 2 நாளாகமம் 8:18ல் கொண்டுவரப்பட்ட தங்கத்தின் அளவு **450 தாலந்து** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வேதாகம காலத்தில் பழைய ஏற்பாடு எழுதப்பட்ட எபிரேய மொழியில் அரிச்சுவடியின் எழுத்துக்களே இலக்கங்களுக்கு உபயோகிக்கப்ட்டன. தமிழில் ச.க. எண்ணும் எழுத்துக்கு இருக்கும் சிறிய வித்தியாசத்தை போலவே எபிரேய மொழியில் 20யையும் 50யும் குறிப்பிடும் எழுத்துக்கள் தோற்றத்தில் ஒரே மாதிரியானதாகவே உள்ளது. இதனால் சாலமோனுக்கு கொண்டுவரப்பட்ட தங்கத்தின் அளவு ராஜாக்களிலும் நாளாகமத்திலும் வித்தியாசமாயிருப்பதற்கு காரணம் வேதத்தை **பிரதி பன்னியவர்** ஒருவர் ஒரு பிரதியில் 50ஐ 20ஆக அல்லது 20ஐ 50ஆக **தவறுதலாக குறிப்பிட்டுள்தே காரணம்** ஆகும். எபிரேய மொழியில் இருப்பதை குறிப்பிடும் **கப்** என்னும் எழுத்து 119ம் சங்கீதத்தில் 81 ம் வசனத்திற்கு தலைப்பாகவும் 50ஐ குறிப்பிடும் **நூன்** என்னும் எழுத்து சங்கீதத்தின் 150 வசனத்திற்கான தலைப்பாகவும் உள்ளது. **இவ்விரு எழுத்துக்களின்** தோற்றத்தை பார்த்தால் **மிக சிறிய வித்தியாசத்துடன்** இருப்பதை நாம்காணலாம் இதனால் பிரதி பண்ணியதில் இத்தவறு தவிர்க முடியாததாக இருந்துள்ளது. எனினும் ராஜாக்களின் நாளாகம புத்தகங்களின் ஆரம்ப பிரதியில் 420 தாலநது அல்ல 450 தாலந்தாக இருந்தது என்பதை நம்மால் அறியமுடியாதுள்ளது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஒரு தாலந்து ஏறக்குறைய 75 ராத்தால் அல்லது 34 கிலோ நிறையுள்ளது.

### *முரண்பாடுகள் இல்லை No. 21*

**2 ராஜாக்கள் 24:8 - யோயாக்கின் ராஜாவாகிய போது 18 வயதாயிருந்தது எருசலேமிலே மூன்று மாதம் அரசாண்டான்**

**2 நாளாகமம் 36:9 - யோயாக்கின் ராஜாவாகிற போது 8 வயதாயிருந்து 3 மாதம் 10 நாளும் எருசலேமில் அரசாண்டான்.**

சரித்திர புத்தகங்களில் உள்ள முரண்பாடுகளில் ஒன்றாக பலராலும் சுட்டிக்காட்டப்படுவது யோயாக்கின் என்னும் அரசனில் ஆட்சிக்காலத்தை பற்றிய குறிப்பாகும். ராஜாக்கள் புத்தகத்தின்படி இவன் **18 வயதில்** அரசனாகி 3 மாதங்கள் ஆட்சிபுரிந்துள்ளான். (2 ராஜா 24:8) ஆனால் நாளாகம புத்தகத்தில் இவ்வரசன் 8 வயதில் அரசனாகி 3 மாதமும் 10 நாட்களும் அரசனாக இருந்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (2 நாளா 36:9)

ராஜாக்கள் புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பது போல யோக்கின் என்னும் அரசன் கி. மு. 598ன் இறுதியிலிருந்து கி.மு. 597ம் ஆண்டின் ஆரமபகாலம் வரை மொத்தம் 3 மாதங்கள் மாத்திரமே அரசனாக இருந்துள்ளான். பாபிலோனிய சரித்திர குறிப்புகளிலும்இவனைப்பற்றி எழுதப்பட்டுள்ளது. இவன் கி. மு. 597ல் பாபிலோனியர்களினால் சிறை பிடிக்கப்பட்டுள்ளான். அவன் தன் தகப்பன் செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதையெல்லாம் செய்துள்ளான் என்னும் குறிப்பு ராஜாக்கள் புத்தகம் கூறுவதுபோல இவன் 18 வயதுடையவனாக இருந்தபோதே அரசனாயிருக்கவேண்டும் என்பதை அறிய தருகின்றது. மேலும் இவன் மனமுடித்தவனாக இருந்ததும் இதை உறுதிபடுத்துகிறது. இதனால் நாளாகம புத்தகத்தில் உள்ள குறிப்பு வேதத்தை பிரதி பண்ணும்போது ஏற்பட்ட ஒரு தவறாகவே உள்ளது.

அக்காலத்தில் எபிரேய மொழியில் இலக்கங்கள் சொற்களில் எழுதப்படுவதினாலேயே இத்தகைய தவறு ஏற்பட்டுள்ளது. அக்காலத்தில் **பதினெட்டு** பத்து எட்டு என்றுதான் எழுதப்படும். நாளாகம புத்தகத்தில் 18 என்பதில் **பத்து** என்னும் சொல் பிரதி பண்ணும் போது விடப்பட்டுள்ளது. இதனால் யோயாக்கின் அரசனாகியது 8 வயதில் என்று எழுதப்பட்டுள்ளது உள்ளது. மேலும் இதில் விடப்பட்ட 10யை ஆட்சிக்காலத்தில் சேர்த்துள்ளார் இதனால் நாளாகம புத்தகத்தில் ஆட்சிக்காலம் மூன்று மாதங்களும் **10 நாட்களும்** என்றும் உள்ளது. எனினும் பழைய ஏற்பாட்டின் சில **எபிரேய மொழி கையெழுத்து பிரதிகளில்** நாளாகம புத்தகத்திலும் யோயாக்கின் **18 வயதிலேயே** அரசனாகியதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

### *முரண்பாடுகள் இல்லை No. 22*

**1 நாளாகமம் 3:19 செருபாபேல் என்பவன் பெதாயாவின் குமாரன்**

**எஸ்ரா 3:2 செருபாபேல் என்பவன் செயல்தியேலின் குமாரன்**

பழைய ஏற்பாட்டு காலத்தின் கி. மு. 586ல் பாபிலோனுக்கு சிறைப் பட்டுபோன யூதர்கள் 70- வருஷங்களுக்கு பின்னர் தங்களுடைய சொந்த நாட்டுக்கு திரும்பி வந்தபோது அவர்களுக்கு தலைமை தாங்கிவர்களில் ஒருவனாகிய "செருபாபேல் என்பவனுடைய **தகப்பனின் பெயர்** வேதாமத்தில் வித்தியாசமான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது, வேதவிமர்சகர்களுக்குப் பெரியதோர் முரண்பாடாக உள்ளது. 1 நாளாகமம் 3:19ல் செருபாபேலின் தகப்பனுடைய பெயர் **"பெதாயா"** என்று எழுதப்பட்டுள்ளது .அனால் வேதாகமத்தின் ஏனைய பகுதிகள் அனைத்திலும் இவனுடைய பெயர் **"செயல்தியேல்"** என்றே உள்ளது (எஸ் 3:2, 3:8, 5:2 நெகே 12:1, ஆகா 1:1, 1:12, 1:14, 2:2 மத் 1:12, லூக் 3:27) இதனால் நாளாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **செருபாபேல்** வேறு **ஒரு மனிதன்** என்று சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஆனால் இதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை.

செருபாபேலின் தகப்பனுடைய பெயர் நாளாகமப் புத்தகத்திலுள்ள வம்ச வரலாற்று அட்டவணையில் மாத்திரமே **பெதாயா** என்று உள்ளது. ஏனைய இடங்களில் செருபாபேலின் தகப்பன் **செல்தியேல்** என்றே அறியப்பட்டுள்ளான். உண்மையில் செல்தியேல் என்பவன் வாரிசு இல்லாமல் மரணமடைந்துள்ளான் அதன்பின்னர் அவனுடைய **விதவை மனைவி** அக்காலத்து மைத்துன முறை விவாகத்தின்படி( உபா 25:5- 10) "பெதாயா" என்பவனின் மனைவியாகி **செருபாபேலை பெற்றுள்ளாள்.** இத்தகைய திருமணத்தில் பிறக்கும் **முதலாவது ஆண்பிள்ளை** மரித்த கணவனுடைய **வாரிசாக** கருதப்படுவதானால் **செரபாபேல்** என்பவன் **செல்தியேலின்** குமாரனாக அறியப்பட்டுள்ளான். அதனாலேயே வேதாகம சரித்திரத்தில் இவன் **செல்தியேலின்** குமாரனாக கருதப்பட்டுள்ான். நாளாகம புத்தகத்தில் உள்ள வம்ச வரலாற்று அட்டவனை இவனுடைய சொந்த தகப்பனின் பெயரை குறிப்பிட்டுள்ளது. எனவே இப்பிண்ணனி விஷயங்களை அறியாத நிலையில் செருபாபேலின் தகப்பனுடைய பெயரில் முரண்பாடு உள்ளதுஎன்று தற்கிப்பது அர்த்தமற்றது. உண்மையில் **பெதாயா** என்பனின் மூலம் **செருபாபேல்** செல்தியேலின் **மகனாக** இருக்கின்றான். இதனால் 1 நாளாகமம் 3:19 வேதாகபமத்தின் ஏனைய பகுதிகளை முரண்படுத்த வில்லை.

---

1) G. A. Buttrick Ild Interpreter's Dictionary of the Bible Volume - 4. P - 955-956
2) J.A. Thompson 1,2 Chronicles; The New American Commentary P -70; Kail 81-82; J.B. Payne 1,2 Chronicles The Expositor's Bible Commentary Volume 4 P 339
3) A.E. Hill 1&2 Chronicles; The NIV Application Commentary PP - 84 & 85

குறிப்பு : Dr. வசந்தகுமார் அவர்கள் இப்போது இங்கிலாந்து தேசத்தில் லன்டனில் வசிக்கிறார்.

அவர் ஆராய்ச்சி செய்த எழுதும் ஒவ்வொரு விஷயத்துக்கும் மேலே கடைசியில் காணப்படும் **சிறிய குறிப்புகளில்** குறிப்பிட்ட விஷயத்தின் விவரத்தை எந்தெந்த **சரித்திர புத்தகங்களில்** இருந்து தேர்ந்தெடுத்து எழுதியது என்பதை வாசிப்பவர்கள் அறிய **ஆதாரமாக** எல்லாவித

கேள்விகளுக்கும் இவர் பதிலளிக்கும்போது ஒவ்வொரு பதிலின் கீழே அந்த புத்தகத்தின் விவரத்தை குறிப்பிட்டுள்ளார். நேரம் குறைவு காரணமாக நான் அவைகளை பல பதில்களின் கீழே குறிப்பிடவில்லை. ஆதாரமில்லாமல் இவர் எந்த விஷயத்தையும் எழுதுவதில்லை.

**வேத வசனங்களில் முரண்பாடுகள் இல்லை** என்ற தலைப்பில் கடந்த மாத ஜாமக்காரனிலும் இந்த மாத ஜாமக்காரனிலும் தொடர்ந்து வெளியிட்டேன் இதோடு இவ்விவரங்களை முடித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட வேத ஆராய்ச்சி பலருக்கு படிக்க **சலிப்பு ஏற்பட்டதை** நான் அறிவேன். ஆனால் **வேத வசனத்தை** ஆராய்பவர்களுக்கும் **வேத வசனத்தை** தியானிப்பவர்களுக்கும் இந்த குறிப்பிட்ட விவரங்கள் மிகவும் பிரயோஜனமாகவும் வேதத்தில் எந்த முரண்பாடுகளும் இல்லை என்று அவர்கள் அறிந்ததால், வேத வசனங்களை **நம்புவதற்கும்** விசுவாசிப்பதற்கும் தங்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தாக ஏராளமானவர்கள் எனக்கு அறிவித்தார்கள்

மற்றவர்கள் இந்த பகுதியை படிக்கவே இல்லை என்பதையும் அறிந்தேன்.

வேதத்தை மேலோட்டமாக வாசிக்காமல் அதில் வாசிக்கும்போது ஏற்படும் சந்தேகங்களை உடனே ஆவிக்குரியவர்களிடம் விசாரித்து அறிந்துகொள்ளும்போதுதான் வசனத்தில் வளரலாம், அப்போதுதான் வேதத்தையும் நேசிக்க முடியும். அதனால்தான் **வேதத்தை ஆராய்ந்து** பாருங்கள் என்று இயேசு கிறிஸ்து கூறினார்.

டாக்டர் வசந்தகுமார் அவர்களுக்கு கர்த்தர் கொடுத்த தாலந்துகளுக்காக தேவனை துதிக்கிறேன்.

என் வாசகர்கள் வசனத்தில் வளரவேண்டும், வசனத்தில் நிலைநிற்க வேண்டும். வசனத்தை சந்தேகப்படகூடாது என்பதற்காகவே, என்னைவிட நல்ல எழுத்தாற்றல் உள்ளவர்களின் கட்டுரைகளை வாசகர்களின் நன்மைக்காக ஜாமக்காரனின் வெளியிடுகிறேன்.

☐ சகோ Rev. சேவியர், (BYM) R. ஸ்டான்லி இவர்களைப்போல் இன்னும் சிலரின் ஆழமான **வேத ஆராய்ச்சிகள்** எல்லாரும் அறிய வேண்டியவைகளாகும். உபதேசத்தில் எங்களுக்குள் கருத்து வேற்றுமை மிக அதிகம் உண்டு. Rev. சேவியர் அவர்கள். டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் எத்தனை உண்மையாக இருந்தாலும் அவர் CSI சபையில் தொடர்ந்து அங்கம் வகிப்பதால் அவர் **பரலோகம்** போக மாட்டார் என்று எழுதிவிட்டார். நல்ல வேளை **பரலோகத்தின் சாவி** Rev. சேவியர் அவர்களிடம் **கொடுக்கப்படவில்லை.** ஆனால் அவரின் ஆழமான வேத ஆராய்ச்சியின் ஞானம் **ஒரு சில** வேத ஆராய்ச்சி விஷயங்களில் மட்டும் புகழ்படத்தக்கது அகும். அதில் என் வாசகர்களுக்கு பிரயோஜனமாவைகளை அவர் உத்தரவு பெறாமலே என் ஜாமக்காரனில் உரிமையுடன் வெளியிடுகிறேன். காரணம் எங்களுக்குள் முரண்பாடு இரந்தாலும் அவர் என்னை நேசிப்பவர் என்று அறிவேன். ஆகவே என் வாசகர்கள் வசனத்தில் தேறுவதற்கு மற்ற புத்தகங்களிலிருந்தும் மற்ற பத்திரிகைகளிலிருந்தும் முக்கியமானவற்றை எடுத்து வெளியிடுவேன். ●



.

# இயேசு கிறிஸ்துவின் கைகளில் எந்த இடத்தில் ஆணிகள் அடிக்கப்பட்டது....

## உள்ளங்கையிலா? கையின் மணிகட்டு பகுதியிலா?



இது தவறு

இன்று பலர் தரிசனங்களில் இயேசுவை கண்டேன் அல்லது என் படுக்கை அறையிலேயே இயேசு நேரில் வந்தார். அவர் தன் **கைகளை** என்னிடம் காட்டினார். அதில் ஆணிகளால் அடிக்கப்பட்ட **துளை** இருந்ததை கண்டேன், **தொட்டுப்பார்த்தேன்.** சிலர் அவரின் **உள்ளங்கையின் ஓட்டை** வழியாக **ஒரு ஒளிக்கதிர்** என்மேல் விழுந்தது என்றெல்லாம் **சாட்சிகளில்** மேடையில் **பிரசங்கத்தில்** TVயில் கூறியதை கேட்டிருப்பீர்கள்.

ஆனால் அவைகள் அத்தனையும் வெரும் **கற்பனைகளேயாகும்.** ரோம அரசின் சரித்திரத்திலும், யூதர்களின் சரித்திரத்திலும் மிகப்பெரிய குற்றம் செய்தவனுக்குத்தான் **சிலுவை தண்டனை** கொடுப்பது வழக்கம். **இரண்டு விதமான** சிலுவை தண்டனை உண்டு.

### 1) கயிறுகளால் சிலுவையில் கட்டி தொங்கவிடுவது

ஒன்று சிலுவையில் குற்றவாளிகளின் **கைகளை கால்களை கயிறுகளினால்** கட்டி தொங்கவிடுவார்கள்.

அவர்களை **கழுகுகளும்**,பருந்துகளும் **பிணம் தின்னும் பறவைகளும்** அந்த சிலுவையில் தொங்கும் குற்றவாளி உயிரோடிருக்கும்போதே அவைகள் அவனை **கொத்தி தின்னும். கண்களை** பிடுங்கும் இப்படியாக சித்ததிரவதைபட்டு அவன் **அலறும் சத்தத்தை** ஆளுகிறவர்கள் அதிகாரிகள் தங்கள் வீடுகளில் இருந்தவாரே அழுக்குரலை கேட்டு **ரசிப்பார்கள்.** இது ஒரு வகை சிலுவை தண்டனை.



இது சரி

## 2) ஆணிகளால் அடித்து தொங்கவிடுவது மற்றொரு வகை சிலவை தண்டனை

அதிக கொடூர பாவம் செய்தவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனைதான் ஆணிகளால் அடிக்கும் சிலுவை தண்டனைஆகும். **கைகளிலும் காலிலும்** உயிரோடிருக்கும்போதே கதற கதற **ஆணிகளால்** அடித்து தொங்கவிடுவார்கள். பிரச்சனை என்னவென்றால்.. **கைகளில்** குறிப்பாக **உள்ளங்கையில்** ஆணிகள் அடிக்கமாட்டார்கள். காரணம் **உள்ளங்கைகளின் நடுவில்** ஆணி அடித்தால் சிலுவையில் தொங்கும் அந்த சரீரத்தின் **பாரம் தாங்காமல்** உள்ளங்கையில உள்ள **விரல்கள் நடுவே** உள்ள எலும்புகளின் சந்தில் ஆணியோடு சதை பீய்த்துக்கொண்டு சரீரம் சிலுவையில் இருந்து முகம்குப்புற விழ நேரிடும். ஆகவே **ரோமர்களின் தண்டனை** முறையில் மனிதனின் **மணிக்கட்டு** பாகத்தில் உள்ள (Wrist) இரண்டு எலும்புகளின் மத்தியில் ஆணி அடித்தால் அது பீய்த்துக்கொள்ள வழியில்லை. ஆகவே இயேசு கிறிஸ்துவின் **உள்ளங்கையில்** ஆணிகள் அடிக்கப்படவில்லை. **கையின் மணிக்கட்டு** பகுதிகளில் தான் **ஆணிகள்** அடிக்கப்பட்டது என்று சரித்திர ஆசிரியர்களும் ரோம அரசின் தண்டனை புத்தகத்திலும் எழுதப்பட்டதாக கூறுகிறார்கள். **ரோமர்களின்** தண்டனை முறைமைகள் என்ற சட்ட நூலிலும் காணப்படும் சிலுவை தண்டனை முறைகளின் மூலமாகவும் இவ்விவரத்தை அறியலாம்.

அப்படியானால் இத்தனை காலமாக **இயேசுவின் கைகளையும்** அதில் **ஓட்டையையும்** தெளிவாக கண்டேன் என்பவர்கள் கூறியது என்ன ?

அது புறடா- பொய் - கற்பனை அவ்வளவே !

## கடிதம் - Email மூலம் தொடர்பு கொள்ளவும்...

தொலைபேசி மூலம் என்னோடு பலரால் தொடர்புக்கொள்ளமுடியாமல் சலித்துக்கொள்கிறார்கள். நான் வீட்டில் இரண்டு நாட்கள் மட்டுமே தங்குகிறேன். வட இந்தியா ஊழியம் சென்றால் அந்த இரண்டு நாட்களும் நான் வீட்டில் இருப்பதில்லை.

தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முடியாததால் தயவுசெய்து கடிதம் அல்லது e-mail மூலமாக தொடர்புகொள்ள முயலுங்கள். அதில் உங்கள் முழு விலாசமும் தொலைபேசி எண்ணும் குறிப்பிடுவது நல்லது.

சில சமயம் வெளி ஊர்களில் தங்கும்போது உங்களுக்காக ஜெபித்து உங்கள் தொலைபேசியில் நானே உங்களை கூப்பிட்டு பேசி ஜெபிப்பேன். அது எனக்கு மிகவும் சவுகரியமாக இருக்கிறது. சிலருக்கு வெளி ஊர்களிலிருந்தே கடிதம் மூலம் பதிலும் எழுதிவிடுகிறேன்.

ஆகவே தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, என் தொடர்பு கிடைக்காமல் போகும்போது வருத்தப்படவேண்டாம். கடிதம் மூலம் உங்கள் தொலைபேசி எண்ணையும் சேர்த்து எழுதி உதவுங்கள். நிச்சயம் பதில் எழுதுவேன், அல்லது நானே தொலைபேசியில் தொடர்புகொள்வேன்.

**STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER JAMAKKARAN (FORM IV)**

| | |
|---|---|
| 1. Title of the news paper | : **JAMAKKARAN** |
| 2. Language(s) in which it is published | : **TAMIL / MALAYALAM** |
| 3. Place of publication : | 89,Majeeth Street,<br>Old Suramangalam,<br>Salem - 636 005. |
| 4. Periodicity of its publication : | Monthly |
| 5. Printer's name | : M.Velu |
| (whether citizen of India) | : Indian |
| Address : | P.M.Press<br>168,Arumuga Nagar, Salem-636 005 |
| 6. Publisher & Editor's name | : **Dr.M.G.E.PUSHPARAJ** |
| (whether citizen of India) | : Indian |
| address | 89,Majeeth Street,<br>Old Suramangalam.<br>Salem - 636 005 |

I, **Dr.M.G.E.PUSHPARAJ** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated: 10.3.2016

**Dr.M.G.E.PUSHPARAJ**

Salem - 5 Signature of Publisher & Editor

## மூன்று நாட்கள் மட்டும் இலங்கை கூட்டங்கள்

2017 ஏப்ரல் மாதம் 6, 7, 8 தேதிகள் மட்டும் **இலங்கை GALLE FACE** (கொளும்பு)வில் உள்ள **CHRIST CHURCH** ல் லெந்து நாட்களின் விசேஷ கூட்டங்களில் பேச அழைக்கப் பட்டுள்ளேன்

வேறு சபைகளுக்கோ இலங்கையின் வேறு ஊர்களுக்கோ பிரசங்கிக்க எனக்கு தேதிகள் அந்த மாதத்தில் இல்லாதபடியால் 3 நாட்கள் மட்டும் இலங்கைக்காக கொடுத்தேன்.

கொளும்பு கூட்ட விவரங்கள் அறியவும், **என்னை நேரில் கண்டு** கதைக்கவும், ஜெபிக்கவும் தொடர்புக் கொள்ளவேண்டிய தொலைபேசி எண்.

Fr. Charles Gnanaiah 94770756688, 94112422878
e-mail : fr.rdcg@hotmail.com/revrdcg@gmail.com

# இயேசுகிறிஸ்து ஏன் உயிரோடிருக்க வேண்டும்

## (உயிருள்ள ஒரே தெய்வம் இயேசு)

- (இயேசுவின் மூலமாய்) தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக **வேண்டுதல்** செய்யும்படிக்கும்... முற்றுமுடிய இரட்சிக்கும்படிக்கும்... **அவர் எப்போதும் உயிரோடிருக்கிறார்.** எபி. 7:20
- இயேசு கிறிஸ்து (உயிரோடு) **எழுந்திருக்கவில்லை** என்றால் எங்கள் பிரசங்கம் விருதா, உங்கள் **விசுவாசமும்** (நம்பிக்கையும்) விருதா. (வீணாயிருக்கும்) இயேசு உயிரோடே எழுந்திராமலிருந்தால் நீங்கள் இன்னும் **உங்கள் பாவங்களில்** இருப்பீர்கள். 1 கொ.15:14,15.
- (நம் தெய்வம்) **உறங்குவதும்** இல்லை. **தூங்குவதும்மில்லை.** சங் 121:14

இப்படிப்பட்ட தெய்வத்தை குல தெய்வமாக பெற்ற நாம் யாவரும் பாக்கிவான்கள்

**MARCH 2017**

# Printed Book/Book Post


**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**


**Return Requested:**


**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**



Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.